# கொ/இந்துக் கல்லூரி, கொழும்பு – 4
# முதலாந் தவணைப் பரீட்சை – 2016

## தமிழ்

## தரம் - 07

சுட்டெண்:................................ நேரம் : 2 மணி

### பகுதி I

மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

01. "ஆயும் மலர்ப்பொழில் ஆற்றி வந்தேன்" பொழில் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
    1) அழகு 2) சோலை 3) சாலை 4) மாலை
02. மாணவர்கள் உற்சாகத்துடன் பாடசாலைக்கு வந்தனர். உற்சாகம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
    1) சோர்வு 2) சுறுசுறுப்பு 3) பரிவு 4) கலகலப்பு
03. காட்டு விலங்குகளில் களிறு மிகவும் பெரியது. களிறு என்பதன் எதிர்ப்பாற் சொல்
    1) மறி 2) பசு 3) பிடி 4) பிணை
04. தொல்காப்பியர் நான்கு நிலமாகப்பிரித்து நானிலம் என்று குறிப்பிட்டார். இவ்வாக்கியத்தின் எழுவாய்.
    1) நிலத்தை 2) பிரித்து 3) குறிப்பிட்டார் 4) தொல்காப்பியர்
05. குலவி, குளவி, குழவி, குலம் என்ற சொற்களின் பொருள்கள் ஒழுங்கு முறையில் வருவது.
    1) குழந்தை, உறவாடி, வண்டு, சாதி
    2) உறவாடி, வண்டு, குழந்தை, சாதி
    3) வண்டு, உறவாடி, சாதி, குழந்தை
    4) சாதி, வண்டு, உறவாடி, குழந்தை
06. "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்" என்ற பாடலைப் பாடியவர்.
    1) கம்பர் 2) காளிதாஸர் 3) பாரதியார் 4) திருவள்ளுவர்
07. ஒரு வாக்கியத்தில் தொடராக வரும் சொற்களைப் பிரித்துக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நிறுத்தற் குறியீடு.
    1) காற்புள்ளி 2) முற்றுப்புள்ளி 3) வினாக்குறி 4) வியப்புக்குறி
08. பணிவுடைய நல்ல மாணவன் பெரியோரது பாராட்டைப் பெற்றான். இதில் வந்துள்ள எழுவாய் அடைமொழி
    1) பாராட்டைப் 2) பெரியோர் 3) மாணவன் 4) நல்ல
09. முதல் எழுத்தக்களின் எண்ணிக்கை
    1) 12 2) 30 3) 18 4) 216
10. "கடமைசெய்வதிலும் பிறர் நலம் பேணுதல் சுயநலம் காப்பதற்கே" என்ற கருத்தை உணர்த்தும் பழமொழி
    1) செய்யுந் தொழிலே தெய்வம்
    2) ஊரார் பிள்ளை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாய் வளரும்
    3) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
    4) ஆனை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்

11. ஒத்த ஓசை உடைய சொற்கூட்டம்

1) மணம், பணம், குணம்

2) வரம், வாரம், வறம்

3) வடை, வாடை, வட்டை

4) தரம், தாரம், தறம்

12. காட்டு விலங்குகளைப் பாதுகாக்கும் புகலிடம்

1) பனி வலயம் 2) குளிர் வலயம் 3) சரணாலயம் 4) வெப்ப வலயம்

13. ய், ர், ல், வ், ழ், ள் என்ற மெய் எழுத்துக்களின் வகை

1) வல்லினம் 2) மெல்லினம் 3) கடையினம் 4) இடையினம்

14. ஒலியின் வரிவடிவம் எனக்கூறப்படுவது.

1) உச்சரிப்பு 2) எழுத்து 3) வாசிப்பு 4) பேச்சு

15. ஷிறந்த எழுத்து காணப்படும் சொல்

1) பாசம் 2) வேடம் 3) பாடம் 4) கோஷம்

16. காடும், காடு சார்ந்த நிலம் எனப்படுவது

1) குறிஞ்சி 2) முல்லை 3) மருதம் 4) நெய்தல்

17. “ரைப்ரைட்டர்” என்ற சொல்லின் தமிழ் வடிவம்.

1) தொலைபேசி 2) எழுது கருவி 3) தட்டச்சு 4) விசைப் பலகை

18. காந்தியடிகள் “போர்ப்பந்தர்” என்ற ஊரில் பிறந்தார்.இதில் வந்துள்ள ஊர் என்ற சொல்

1) பொருட்பெயர் 2) சினைப் பெயர் 3) இடப் பெயர் 4) காலப் பெயர்

19. “மலரும் மாலையும்” என்ற நூலில் காணப்படும் பாடல்.

1) “காங்கேயன் துறையிலிருந்து கீரி மலை”

2) “கல்லும் மலையும் குதித்து வந்தேன்”

3) “அறம் பொருள் இன்பம் வீடெறும்”

4) “பெற்றம் புலியின் தோல் போர்த்து”

20. கீழ்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதும்போது அமையும் ஒழுங்கு முறை

அ. உலோகங்களை தீயில் காய்ச்சி கருவிகளை அமைக்கப் பழகிக் கொண்டான்.

ஆ. காலம் செல்லச் செல்ல மனிதனின் அறிவு வளர்ச்சி பெற்றது.

இ. நெருப்பு மனித குலம் கண்டு முதல் அறிவியல் கண்டபிடிப்பாகும்.

ஈ. கொடிய விலங்குகளை விரட்ட தீயைப் பயன்படுத்தினர்.

1) அ, ஆ, இ, ஈ 2) ஆ, இ, ஈ, அ 3) ஈ, ஆ, அ, இ 4) இ, ஈ, ஆ, அ

(20×2=40 புள்ளிகள்)

## பகுதி II

முதலாம் வினா, இரண்டாம் வினா, மூன்றாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

01. வகுப்பறையில் நீர் செயற்படுத்திய கணிப்பீட்டு செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1) உமது வகுப்பறையில் வழங்கப்பட்ட கதைத் தலைப்புக்கள் 4 தருக.

2) உமக்கு பிடித்த கதை எது? அதற்குரிய காரணத்தை எழுதுக.

3) கதையில் காணப்பட்ட சிறப்புக்கள் 4 எழுதுக.

4) நீர் வாசித்த கதை கூறும் படிப்பினைகள் 2 எழுதுக.

(4×4=16 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்று பற்றி 150 சொற்கள் கொண்ட ஒரு கட்டுரை எழுகதுக.

1) வன விலங்குகளைப் பாதுகாப்போம்

2) இயற்கை இன்பம்

3) விஞ்ஞான உலகம்

4) கைத் தொலைபேசியின் சுயசரிதை

(14 புள்ளிகள்)

03. உமது பாடசாலையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப்போட்டி பற்றி உமது நண்பனுக்கு 75 சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக.

(10 புள்ளிகள்)

04. பாடநூலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதக.

1. முத்தையா வர்த்தக ஸ்தாபனத்தில் பணிபுரிந்த சந்தர்ப்பத்தில் கற்றவைகள் எவை?
2. காந்தியடிகள் எழுதிய கடித்தில் கையாளப்பட்டுள்ள உவமைத் தொடர்கள் 2 எழுதுக.
3. சுட்டெழுத்துக்கள் எவை?
4. அந்தரேயின் தாயினது குணப்பண்புகள் 2 எழுதுக.
5. சிறுமியின் பெயர் யாது? அவளுக்கு எத்தனை வயது?

(2×5=10 புள்ளிகள்)

05. பின்வரும் சொற்களுக்கு பொருள் விளங்கும் வகையில் வாக்கியம் அமைக்குக.

1) தலை –

2) தளை –

3) தழை –

4) கூளம் -

5) கூழம் -

(2×5=10 புள்ளிகள்)

06. பின்வரும் தலைப்பக்களுள் ஒன்றினைத் தெரிவு செய்து பந்தி அமைப்பு முறைக்கேற்ப 5 வாக்கியங்கள் கொண்ட ஒரு பந்தியை எழுதுக.

1) நாமும் சூழலும்

2) திருக்குறள்

3) நிறையுணவு

4) ஒழுக்கம்

(2×5z=16 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education